சகடைபற்றிஆராயசிறில்-ஹமில்டன்பலாலிவிரைவு

விலை ரூபா 5.00

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 23 இதழ் 147
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 07 07 — 1992

★ பலவேகய - 2

# இராணுவ நடவடிக்கையில் படையினருக்கு பலத்த இழப்பு

(யாழ்ப்பாணம்)

**சிறிலங்காவின் சகல படைப்பிரிவுகளும் ஈடுபட்டுள்ள பலவேகய -2 இராணுவ நடவடிக்கையில் புலிகளின் தாக்குதல்களினால்படையினர் பலத்த இழப்புக்களைச் சந்தித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

முப்படைகளும் இணைந்து நடத்திவரும் இராணுவ நடவடிக்கையில் புலிகளின் திரமிகு தாக்குதல்களில் படையினர் பலத்த இழப்புக்களைச் சந்தித்து வருகின்றனர். சிறிலங்கா, பாதுகாப்புப் படையின் 6-வது கவச வாகனப் பிரிவு, 6-வது பீரங்கிப் படைப்பிரிவு, 5-வது, 6-வது இராணுவ அணியின் பொறியியல் பிரிவு, 3-வது முன்னணி காலாட்படைப் பிரிவு, 1-வது காலாட்படையின் இளவணி, 6-வது, 7-வது சிங்கப்படைப்பிரிவுகள், 1-வது 5-வது, 6-வது கெமுனு

[4-ம் பக்கம் பார்க்க]

## புல்லாவெளியில் புலிகள் இராணுவம் நேற்று கடும்சமர்

(யாழ்ப்பாணம்)

புல்லாவெளியில் நேற்று 8-வது நாளாக விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையில் கடுமசமர் நடைபெற்றது

புல்லாவெளியிலும் அதன் அண்டியபகுதிகளிலும் பலத்த விமானத்தாக்குதலின் உதவியுடன் படையினர் முன்னேற எடுத்த முயற்சி புலிகளால முறியடிக்கப்பட்டது

நேற்றைய சண்டையிலும் படையினரின் வாகனங்கள் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

விமானக்குண்டு வீச்சுக்கள் ஷெல்தாக்குதல்கள் உக்கிரமடைந்திருந்த போதிலும் புலிகள் விடாது போரிட்டு வருகின்றனர்.

நேற்றுமாலை வரை கடும் சமர் இருபகுதியினருக்குமிடையே நடைபெற்றது.

[56-ரி;

## மக்களின் பார்வைக்கு விமான பாகங்கள், சடலம்

(யாழ்ப்பாணம்)

இயக்கச்சியில் புலிகளால் சட்டு வீழ்த்தப்பட்ட விமானத்தின் பாகங்களும், விமானியின் சடலமும் நேற்றுப் பொதுமக்களின் பார்வைக்கு யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் வைக்கப்பட்டது.

பெரும் தொகையான மக்கள், விமானத்தின் பாகங்களையும், விமானியின் சடலத்தையும் பார்வையிட்டனர். யாழ்ப்பாணம், முத்திரைச் சந்தி, பண்டத்தரிப்பு, சுன்னாகம் கோண்டாவில், மானிப்பாய், சித்தன்கேணி, சுழிபுரம், சண்டிலிப்பாய் ஆகிய இடங்களில் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

(56-72-109)

## சகடையின் இழப்பு படை நடவடிக்கைகளை பெரிதும் பாதிக்கும்

(சொழும்)

நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகள் இயக்கச்சி பகுதியில் சகடை விமானத்தை சுட்டுவீழ்த்தியதையடுத்து தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கையில் பெரும் பின்னடைவு ஏற்படும் என்று பெயர் குறிப்பிட விரும்பாத இராணுவ அதிகாரிகள் வெளிநாட்டுச் செய்தி ஏஜென்ஸி ஒன்றுக்குத் தெரிவித்துள்ளனர்.

படையினரின் போக்குவரத்து, படையினருக்கான உணவு விநியோகம், ஆயுதங்கள், வெடிமருந்துகள் ஆகியவற்றின் விநியோகம் போன்றவை பெரும்பாலும் இந்த விமானத்தின் மூலமாகவே மேற்கொள்ளப்படுவது வழக்கம்.

எனவே இந்த விமானத்தின் இழப்பு இராணுவத்திற்கு ஒரு பேரிழப்பாக இருப்பதால் படையினரின் இராணுவ நடவடிக்கைகள் பெரும் பாதிப்புக்குள்ளாகுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 5,000 அடி உயரத்தில் வைத்து விமானம்சுட்டுவீழ்த்தப்பட்டது

### ஆறு அதிகாரிகளும்பலி

(கொழும்பு)

விடுதலைப்புலிகளால் இயக்கச்சி பகுதியில் சுட்டுவீழ்த்தப்பட்ட வை-8 ரக விமானத்திலிருந்தவர்களில் 6க்கும் மேற்பட்டோர் விமானப்படை அதிகாரிகள் என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 5000 அடி உயரத்தில் பறந்து குண்டு வீச்சு நடாத்திக் கொண்டிருந்த போதே இவ்விமானம் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விமானத்திலிருந்து கொல்லப்பட்டவர்களில் ஆறு பேர் விமானிகள் எனவும் பலர் விமானப்படை உயர் அதிகாரிகள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

---

[யாழ்ப்பாணம்]

நேற்று முன்தினம் இயக்கச்சியில் சீனச்சகடை விமானம் நொருங்கிய சம்பவம் பற்றி விசாரித்து அறியவெனக் கொழும்பிலிருந்து உயர் மட்டக் குழு ஒன்று

(4ம் பக்கம் பார்க்க)

## விமானப்படை துணைத் தளபதி வோல்டரின் மகனும் பலி

[கொழும்பு]

இயக்கச்சியில் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட விமானத்தில் இறந்த விமானப் படை அதிகாரிகளில் ஒருவர் சிறிலங்கா விமானப்படை துணைத்தளபதி வைஸ் மார்

(4ம் பக்கம் பார்க்க)

## விசாரணை நடத்த முடிவு

[கொழும்பு)

வை 8 விமானம் விழுந்து நொருங்கியது தொடர்பான விசாரணை செய்ய சிறிலங்கா விமானப்படையினர் முடிவு செய்துள்ளனர்.

விமானம் நொருங்கியது

[4-ம் பக்கம் பார்க்க]

## புலிகள் விமானத்தை சுட்டதை நிராகரிக்க முடியாது

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் விமானத்தை சுட்டு வீழ்த்தியிருப்பதை தம்மால் நிராகரிக்கமுடியாது என்று விமானப்போக்குவரத்து அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

[4-ம் பக்கம்பார்க்க]

## அதி உயரத்திலிருந்து விமானத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

கட்டைக்காடு புல்லாவெளியில் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் கடும் சமரில் படைகளுக்கு உதவியாக விமானப் படைகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் விமானக் குண்டு வீச்சுத்தாக்குதல்கள் அதி உயரத்திலிருந்தே மேற்கொள்ளப்பட்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன

(4ம் பக்கம் பார்க்க)

## 9000 மாணவருக்கு இம்முறை பல்கலைக்கழக அனுமதி

[கொழும்பு]

1990ம் ஆண்டுக்கான க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் சித்தி அடைந்தவர்களில் 9,000 மாணவர்கள் இம்முறை பல்கலைச்கழகங்களுக்கு அனுமதி பெறவுள்ளதாகக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

[4-ம் பக்கம் பார்க்க]

விமானத்தின் சிதைவுகளை

## படம் பிடிக்கும் முயற்சி தோல்வி

(கொழும்பு)

சீனச்சகடை விமானத்தின் சிதைவுகளைப் படம்பிடிப்பதற்கு இலங்கை விமானப் படையினர் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

விமானத்தின் சிதைவுகள் விழுந்ததாகக் கருதப்படும் இயக்கச்சிப் பகுதியை படம் பிடிப்பதற்கு விமானப் படையினர் முயற்சிகளை மேற்கொண்டனர். ஆனால் படம் பிடிக்கும் விமானங்கள் சுமார்

(4-ம் பக்கம் பார்க்க)

## 549 தபால் பொதிகளுடன் குமண வந்தது

[யாழ்ப்பாணம்)

549 தபால் பொதிகளுடன் குமணக்கப்பல் நேற்று பருத்தித்துறை துறைமுகத்துக்கு வந்தது.

இக்கப்பலில் மேலும் 1500 மெ. தொ. உரம், 1000 மெ. தொ. சீனி, 11 மெ. தொ. திரிபோஷா மா, 10 மெ. தொ. தகரத்தில் அடைக்கப்பட்ட மீன்வகைகள் உட்பட

[4ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### சோபிதா

பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம், 'சோபிதா' 363, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். (ஏ-2207)

### O/L — 92 வினாத்தாள்

O/L Dec. 92 பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் பெற்றுக்கொள்ளலாம். விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக்கொடுக்கப்படும் பரீட்சைப் பகுதி: Bond Institutes, யாழ்ப்பாணம். (சி-6502-1)

### பயிற்சிப் பரீட்சை

ஆண்டு – 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான விசேட வினாத்தாள்கள் பெற்றுக்கொள்ளலாம். விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக்கொடுக்கப்படும். Bond Institutes, 58A, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (சி-6502-2)

### காணி விற்பனைக்கு

கச்சாய் கடற்கரைக்கு முன்னால் 26 பரப்பு தென்னங் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி ச. மயில்வாகனம், பெரிய மாவடி, சாவகச்சேரி. [ஏ-2268]


# 33 அகதி முகாம்களில் 1,225 குடும்பங்கள் தஞ்சம்

[உடுவில்]

இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்து வரும் குடும்பங்களை குடிய மர்த்தவென வலிகாமம் தெற்கு உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் முப்பத்திமூன்று முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இம்முகாம்களில் 1,225 குடும்பங்களை சேர்ந்த 5,112 பேர் தங்கியுள்தாக தெரிய வருகின்றது.

இடம் பெயர்ந்த குடும்பங்களின் நலன்களைப் பேணுவதிலும், நிவாரணங்கள் வழங்குவதிலும் சர்வோதய இயக்கத்தின் மருதனைமடம் பிரதேச இணைப்பாளர் காரியாலய ஊழியர்கள் ஈடுபட்டுவருகின்றனர்

அண்மையில் வலி வடக்கில் இருந்து இடம்பெயர்ந்துவந்தவர்களை தங்கவைப்பதற்கென எட்டு புதிய முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அண்மையில் இடம்பெயர்ந்த 315 குடும்பங்களுக்கான நிவாரணப்பொருட்களை சர்வோதயம் வழங்கியுள்ளது.

முகாம்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு மூன்றுநாட்களுக்குஒருதரம்அரிசி, பருப்பு, சீனி, நெத்தலி, தேயிலை, பால்மா பொருட்களை அங்கத்தவர் தொகைக்கேற்ப சர்வோதயம் வழங்கி வருகின்றது. [109]

# வீட்டுத்திட்டம் 50பேர் தெரிவு

(சித்தன்கேணி]

15 இலட்சம் வீட்டுத்திட்டத்தின் கீழ் உள்ளூர் மூலப் பொருட்களைகொண்டுவீடுகளை அமைக்கும் திட்டத்தில் சுமார் 50பேர் முதல்கட்டமாக யாழ். மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்படவுள்ளனர்.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்து ஐந்த குடும்பங்களும், சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்து நான்கு குடும்பங்களும், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்து ஆறு குடும்பங்களும் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்து எட்டுக் குடும்பங்களும் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில்இருந்து நான்கு குடும்பங்களும் பருத்தித்துறையில் இருந்து 18 குடும்பங்களும். வல்வெட்டித்துறையில் இருந்து இரண்டு குடும்பங்களும் மொத்தமாக 50 குடும்பங்கள் முதல் கட்டமாக தெரிவுசெய்யப்பட்டு நன்கொடைப்பணத்தைப் பெறவுள்ளனர். (137)

## புத்தகக் கண்காட்சி

[யாழ்ப்பாணம்]

சாவகச்சேரி பிரதேசசபை சரசாலை பொதுநூலகத்தில் இம்மாதம் 11-ந் திகதி தொடக்கம் ஒருவாரத்திற்கு புத்தகக் கண்காட்சி நடைபெறவுள்ளது

அண்மையில் இப்பகுதியில் நடைபெற்ற நூலக வாரத்தின்போது சேகரிக்கப்பட்ட இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட நூல்கள் இக்கண்காட்சியில் வைக்கப்படவுள்ளன.

சாவகச்சேரி பிரதேச ஆணையாளர் திரு. பூ. சுந்தரம்பிள்ளை தலைமையில் இவ் வைபவம் நடைபெறவுள்ளது.

## இன்று

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை வீரபத்திரசிவன் கோவில் பூங்காவனத்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை வெகு சிறப்பாக நடைபெறவுள்ள .

இவ்விழாவின் இரவு நேர நிகழ்ச்சியாக சங்கீதம். நடனம் நாடகம் முதலானவை இடம்பெறுகின்றன. (139)

0 0 0

(வட்டுக்கோட்டை)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட மட்டத்திலான கனிஷ்ட பிரிவு மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு எஸ். வி. மகேசவேல் தலைமையில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கான சகல நடவடிக்கைகளையும் விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் திரு வ. முருகேசு மேற்கொண்டு வருகிறா. (139)

0 0 0

(யாழ்ப்பாணம்)

பொலிகண்டி கந்தவனக் கடவை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலய மகோற்சவத்தின் வசந்தோற்சவம் இன்று விசேடமாக நடைபெறும். 13ம் திகதி இரதோற்சவமும்] 14ம் திகதி செவ்வாய் தீர்த்தோற்சவமும் நடைபெறும்,

0 0 0

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1–30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. (71)

0 0 0

(யாழ்ப்பாணம்)

இன்று காலை 9 மணிக்கு விவசாயம், வர்த்தகம், மனையியல் தவிர்ந்த ஏனைய தொழிற்பாட ஆசிரியர்களுக்கான கூட்டம் யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

(சு.

0 0 0

(உடுவில்)

சுன்னாகம் பிரதேச சபையிலும் அதன் உபஅலுவலகங்களிலும் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் அனைவரையும் இன்று செவ்வாய்க்கிழமை காலை ஒன்பதுமணிக்கு சுன்னாகம் பொதுசன நூலகத்தில் ஒன்றுகூடும்படி பிரதேச சபையின் விசேட வலிதெற்கு ஆணையாளர் செல்வி தனுஜா தணிகாசலம் அறிவித்துள்ளார். (109)

# கடந்த வாரம் 20 சைக்கிள்கள் திருட்டு

[அரியாலை]

யாழ் நகரில் தற்பொழுது சைக்கிள் திருட்டுகள் அதிகரித்துள்ளன. கடந்த வாரத்தில் மட்டும் 20 சைக்கிள்களுக்கு மேல் களவுபோயுள்ளன.

பிச்சைக்காரர்போல நடித்து வீடுகளுக்கு வருபவர்கள் வீட்டுக்காரர் காசு எடுப்பதற்கு வீட்டினுள்ளே போனதும் சாதுரியமாக சைக்கிளை எடுத்துச்செல்வதாக தெரியவருகிறது.

கடந்தசில மாதங்களின் பின் சைக்கிள் திருட்டு மீண்டும் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (59)

# பட்டதாரி பயிலுனர் ஆசிரியர் பயிற்சி

(வேலணை)

பட்டதாரி பயிலுனர் ஆசிரியர் பயிற்சி வகுப்புக்கள் பிரதி சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்றுவருகின்றது.

இப்பட்டதாரி பயிலுனர் ஆசிரியர் பயிற்சி வகுப்பில் வரலாறு, சமூகவிஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் போதனைகள் நடததப்படுகின்றன.

யாழ். மாவட்டத்திலுள்ள சுமார் 150 பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்கள் தற்பொழுது பயிற்சிபெற்றுவருகின்றனர் என்று யாழ் மாவட்ட பட்டதாரி பயிலுனர் சங்கத் தலைவர் திரு. வி. சிவராசா தெரிவித்துள்ளார். (75)

## மணிவாசகர் விழா

(யாழ்ப் ாணம்)

யாழ்ப்பாணம் கலைப்புலவர் வீதியில் அமைந்துள்ள திருவாசக மன்றத்தில் பல்கலைப் புலவர் க. சி. குலரத்தினம் தலைமையில் மாணிக்க வாசகர் குருபூசை வழிபாடு நடைபெற்றது,

பண்டிதர் சோ. தியாகராசபிள்ளை பேருரை நிகழ்த்தினர். திருவாசகமணி க. மாணிக்கவாசகர்ன் சிறப்புரையும், சிவஞான இசைச் செல்வர் இ கருணாகரனின் திருவாசக இசையும் நிகழ்ந்தன.

## கண்டனத் தீர்மானம்

(பருத்தித்துறை)

துர்க்கையம்மன் ஆலயம் வறுருப்பளை அம்மன் ஆலயம் ஆகிய இந்துக் கோயில்கள்மீது ஸ்ரீலங்கா பாதுகாப்புப்படைகள் கண்மூடித்தனமாகக் குண்டுகளை வீசி மக்களைப்பலி கொண்டதற்கும் ஆலயத்தை பலத்தசேதத்திற்குள்ளாக்கியதையும் கண்டித்து கெருடாவில் கலையரசி சனசமூக நிலையம் கண்டனத் தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது. (52)

# பண்டத்தரிப்பு பகுதியில் மின்சார நிலுவைப் பணம் 10 லட்சம் ரூபா

[பண்டத்தரிப்பு)

வலிதென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகப்பகுதியில் மின்சாரம் விநியோகித்ததற்காக பாவனையாளர்கள் அலுவலகத்திற்கு செலுத்தவேண்டிய நிலுவைப்பணம் சுமார் பத்துலட்சம் ரூபா என்று தெரிவிக்கப்படுகின்றது.

நீண்டகாலமாக நிலுவையாக இருக்கும் இப்பணத்தை செலுததுமாறுசேட்டு பட்டின சபை அலுவலகத்தினர் மின் பாவனையாளர்களுக்கு கடிதங்களை அனுப்பி வைத்துள்ளனர்.

இப்பகுதியைச் சேர்ந்த பெரும்பாலான அரச, கூட்டுத்தாபன, தனியார் நிறுவனங்கள் கூட தாங்கள் ஏற்கனவே பயன்படுத்திய மின்சாரத்திற்கான மின்கட்டணங்களை இதுவரை செலுத்தவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (72]

## ஆஸ்பத்திரியில் நடமாடும் நூலகசேவை

[கொழும்புத்துறை]

யாழ் போதனா வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களின் உடலியல், உளவியல் நலன்கருதி நடமாடும் நூலக சேவைஒன்றுநோயாளர் நலன் புரிச்சங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நூலக சேவைக்குத் தேவைப்படும் நூல்கள், கவிதைகள், நாவலகள், வெளியீடுகள், சஞ்சிகைகள், சமய நூலகள் போன்றவற்றை நலன்புரிச்சங்கத்துக்கு அன்பளிப்பாகத் தந்து உதவுமாறு சங்கச்செயலாளா வேண்டுகோள் விடுத்துள்ளார். [154]

## மாணவர்களுக்கு சத்துணவு

(உடுப்பிட்டி)

வடமராட்சியில் பின்தங்கிய கிராமிய பகுதிகளில் அப்பகுதி சிறுவர்களின் நலன்கருதி 17 பாலர்பாடசாலைகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஆரம்பித்துள்ளது.

இப்பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு சத்துணவும் ஆசிரியர்களுக்கும் பாலர் பாடசாலை பயிற்சியும் வழங்கப்பட்டு வருவதாக இணைப்பாளர் திரு இரா சிவச் செல்வம் தெரிவித்தார். (150)

## இராசி பலன்

07-07-1992

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு ஆனி 23)

அட்டமி பி. இ. 12–47 வரை; அத்தம் பி. ப. 4–45 வரை, சித்தயோகம், இராகு காலம் பகல் 2–58 முதல் 4–20 வரை. சுபநேரம் காலை 10–26 முதல் 10–58 வரை.

மேஷம்: ஸ்தான மாற்றம், மன நிம்மதி, உறவில் தென்றல்.

இடபம்: மனக்குறைவு கோபதாபம், பயணசெலவு.

மிதுனம்: விவகாரங்களில் சிக்கல், நிர்வாகச் செலவு, கவலை.

கடகம்: காரியசாதனை, சுபகாரியம். பிணி அகலும்.

சிங்கம்: பேச்சில் குற்றம். திடீர் செலவு, ஏமாறுதல்.

கன்னி: ஒற்றுமைக்குறைவு. கண் எரிச்சல், குடும்ப கவலை,

துலாம்: தொழில் எதிர்ப்பு, சிறு தவறுகள், அலைச்சல்.

விருச்சிகம்: சுயமுயற்சி வெற்றி, குடும்பசுகம், பண வரவு

தனுசு: மனப்போராட்டம், வெகுஜன மதிப்பு, வாகன சுகம்.

மகரம்: கௌரவ பாதிப்பு, மாமனார் தொல்லை, பண முடை.

கும்பம்: சத்துரு பயம், தகாத செயல், பயமிகுதி.

மீனம்: கல்விதானம், விதண்டாவாதம், தான தர்மம்.

ஜோஸ்யர்

## நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மேற்குச் சனசமூக நிலையத்தில் சுகாதாரப் பகுதியினரால் நாய்களுக்கு விசர்நாய் தடுப்பூசி போடப்பட்டது. (154)


# 1991 ஏப்ரல் விசேட G. C. E. (A|L) பரீட்சை

மேற்படி பரீட்சையில் கணிதத்துறையில் 280 புள்ளிகளுக்கு மேல், உயிரியல் துறையில் 270 புள்ளிகளுக்கு மேல், முகாமைத்துவத் துறையில் 280 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவ மாணவிகளையும் அவர்களின் பெற்றோர்களையும் இன்று 92-07-07 (செவ்வாய்க்கிழமை) மாலை 4–00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் காரியாலயத்திற்கு வரும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

நடவடிக்கைக்குழு

24, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி
யாழ்ப்பாணம். (ஏ2275)


## சான்றிதழ் வழங்கும் வைபவம்

[யாழ்ப்பாணம்]

சாவகச்சேரி லயன்ஸ்கழக ஆதரவில் சரசாலை மத்தியவலயில் பயிற்சியை பூர்த்திசெய்த பயிற்சியாளர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் இம்மாத நடுப்பகுதியில் நடைபெறவிருக்கிறது. [மா]

## மனையியல் பொருட்காட்சி

[அரியாலை]

கோப்பாய் மாதர் அபிவிருத்தி நிலையம் நடாத்தும் தையல் மனையியல் கைப்பணிப்பொருட்காட்சி புத்தூர் குமரகுருபரன் மாதர் கிராம சங்க மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மு ப9. மணி தொடக்கம் பிற்பகல் 5 மணிவரை நடைபெறும். (59)

# பொலிகண்டி கந்தவனக்கடவை ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தின் நாளைய வசந்தோற்சவ (9ம் திருவிழா) சிறப்புமலர்

(08 07-1992)

## வேண்டுவோர் வேண்டுவதை ஈந்தருளும் பெருமான்

சீரும் திருவும் பொலியும் ஈழமணி திருநாட்டின் தேவாரம் பாடிய சிவஸ்தலங்களையும், திருப்புகழ் பாடிய குகஸ்தலங்களையுமுடைய எமது தமிழீழத் திருநாட்டின் யாழ் தீபகற்பத்தின் வடகடல் ஓரத்தில் வடமராட்சிப் பகுதியின் சிகரமென விளங்கும் வல்வெட்டித்துறையின் கிழக்கே ஒரு கல் தொலைவில் முறையே மூர்த்தி, தலம் தீர்த்தம் ஆகிய முச்சிறப்புக்களையும் கொண்ட ஒருங்கே அமையப்பெற்று விளங்கும் கந்தவனப் பதியினிலே வேண்டுவார் வேண்டுவதை ஈர்ந்தருளும் கருணாநிதியாகவும், கலியுகத்தில கண்கண்ட தெய்வமாக விளங்குபவருமாகிய சண்முகப் பெருமான் வீற்றிருந்து அருள்பாலிக்கும் பதிதான் பொலிகண்டி கந்தவனப்பதியாகும்.

முருகனுடைய ஆலயங்களுள் கிரிப்பிராந்தம், வனப்பிராந்தம், சமுத்திரப் பிராந்தம் அதாவது மலைச்சாரரிலுள்ள முருகன் ஆலயம், காடுகள் சூழ்ந்துள்ள இடங்களில் அமைந்துள்ள முருகன் ஆலயம், கடல்ச்சாரரிலுள்ள முருகன் ஆலயங்களாகும். இவற்றுள் இரண்டு சிறப்புகளையும் ஒருங்கே அமையப்பெற்ற இடம் பொலிகண்டி கந்தவனக் கடவையாகும்.

இவ்வாலயம் மிகவும் பழமை வாய்ந்தது. இவ்வாலய வரலாறு கர்ண பரம்பரையாக நாம் அறிந்தது. வெள்ளரித் தோட்டத்தில் வேலாயுதம் தான் தோன்றியதாகக் கூறப்படுகிறது தற்போது ஆலயத்தின் வடக்கு வீதியிலுள்ள நறுநீர்க்கேணியும், அதனருகே உள்ள காலம் கணிக்க முடியாத மூன்று வன்னி மரங்களும் சூழஉள்ள பகுதியில் தான் வேல் தோன்றியது. இந் நறுநீர்க் கேணியின் நடுவிலே உள்ள கல்லில் ஆதி காலத்தில் கற்பூரம் விளைந்ததாக வரலாறு உண்டு. இதன் காரணத்தால் இக் கந்தனை கற்பூரக் கந்தன் என்று கூறுகின்றார்கள். இவ்வாலயத்தின் தெற்கு வாசலின் உள்வீதியிலே காஞ்சி மாமரம் ஒன்று நின்றதாகவும், தற்போது அது அழிந்துள்ளதாகவும் கூறப்படுகிறது. இதன்காரணமாக இவ் வேலனை காஞ்சி மாவடி வேலன் என்றும் அழைப்பார்கள்

அக்காலத்தில் இவ்வாலயத்தின் மூலமூர்த்தியாக விளங்கியது வேலாயுதமாகும். பின்பு தென்னிந்தியாவிலே சிக்கல், சிங்காரவடிவேலர், எட்டுக்குடி வேலவர், எண்கண் வேலவர், கற்கோவளத்து கல்யாண வேலவர் ஆகிய மூர்த்திகளை ஒரே ஸ்தபதி செய்ததாகவும் வரலாறு கூறுகின்றது. கற்கோவளத்து கல்யாண வேலவர் முல்லைத்தீவு மாவட்டம், குமாரபுரம் ஆலயத்தில் பூசிக்கப்பட்டுவந்தவராகவும், மேற்படி ஆலயத்தில் பிரதிட்டை செய்ததாக ஆலய வரலாறு கூறுகிறது.

இவ்விக்கிரகம் மேற்படி ஆலயத்தில் பிரதிட்டை செய்யப்பட்ட பின்பு ஆலயம் மிகவும் திருவருள் சிறப்பு மிக்கதொரு தலமாக விளங்கிவந்தது. இவ்வாலய கல்யாண வேலவர்மீது திருப்புகழாசிரியரான அருணகிரிநாத சுவாமிகளால் திருப்புகழ் பாடப்பட்டது. நவாலியூர் சோமசுந்தரப் புலவர் நான்மணி மாலையும், பதிகமும், திருப்பள்ளியெழுச்சியும் பாடியுள்ளார்.

ஒரு புலவர் கட்பார்வை இழந்திருந்தபோது முருகனின் அருளாணைப்படி நான்மணி மாலையும், பதிகமும் பாடி கண்ணொளியைப் பெற்றார் அவர்தான் உடுப்பிட்டியூர் சிவசம்புப் புலவராவர். மேற்படி ஆலயத்தின் முன்னை நாள் அர்ச்சகரான சிவசிறீ சு. கனகசபாபதிக் குருக்கள் அழகிய செந்தமிழ்ப்பாமூலம் திருவூஞ்சல்பா பாடியுள்ளார். இவ்வாலயத்தின் சிறப்புபற்றி தெட்சின் கைலாய மான்மியம் என்னும் வரலாறு நூல் கூறுகின்றது.

மேற்படி ஆலயத்தின் கல்யாண வேலவரின் இடதுகஸ்தம் பின்னமடைய பின்னமடைந்த விக்கிரகத்தை மூலவராக வைத்திருப்பது சரியில்லை என்ற விதிகளுக்கு அமைய புதிதாக ஓர் ஆறுமுகப் பெருமானை தென்னிந்யாவிலுள்ள கும்பகோணத்திலே செய்துஇங்குகொண்டு வரப்பட்டு கும்பாபிஷேகம் செய்து ஆயத்தம் செய்தபோதுமமேற்படி முன்பிருந்த மூர்த்தியை அருகிலுள்ள சமுத்திரத்தில் விடுவதற்கு தீர்மானித்தபோது, எம்பெருமான்கனவிலே தோன்றி என்னை மேற்படி ஆலயத்தின் உள்வீதியில் வடக்கிலே உள்ள வன்னி மரத்தின் கீழ் ஆலயம் அமைத்து வைக்கும்படி கனவில் கட்டளை இட்டதன் பிரகாரம் அம்மூர்த்தியை தற்போது ஆலயம இருக்குமிடத்தில் அமைத்துவைத்துள்ளதாகவும் அறியக்கூடியதாகவுள்ளது அவரே வசந்தோற்சவ தினத்திலே (9-ம் திருவிழா) சந்தனக் காப்புடன் வீற்றிருந்து அருள் பாலிக்கும் பழையவராவார்.

இன்றும் இலங்கையிலேயே மூலமூர்த்தியாக ஆறுமுகப் பெருமானைக் கொண்டுள்ள ஓர் ஆலயமானல் அது பொலிகண்டி கந்தவனக்கடவையாகும். இங்கே உற்சவ காலத்தில் எழுந்தருளும் சண்முகர் மிக மிக விசேடமானதாகும். இவ்வாலயத்தின் பரிவார மூர்த்திகளாக விநாயகர், நாகதம்பிரான், சந்தான கோபாலர், சமயக்குரவர், பழையவர், வேலாயுதம், நவக்கிரகம், மயூரம், பலிபீடம், சேத்திரபாலர், சண்டிகேசவர் போன்ற மூர்த்திகள் உள்ளன.

இவ்வாலய வருடாந்த மகோற்சவம் ஆனிப்பூரணையை தீர்த்த உற்சவமாகக் கொண்டு பதினைந்து நாட்கள் நடைபெறும். இப்பதினைந்து திருவிழாக்களும் பதினைந்து கிராம மக்களால் செய்யப்படும் இவ்வித உற்சவங்களிலே மிக மிக விசேடமான உற்சவங்கள் 2, 4, 7, 9, 11. 13, 14, 15-ம் உற்சவங்களாகும். திருவிழா உற்சவங்களிலே 8-ம் நாள் மிருகயாத்திரை (வேட்டைத்திருவிழா)க்காக வள்ளி தெய்வானை சகிதம் எம்பெருமான் பொலிகண்டி உப்புக்கிணற்றடி பிள்ளையார் கோவிலுக்கு எழுந்தருளுவார். 9-ம் நாள் வசந்தோற்சவ தினத்திலே கல்யாணவேலவர் இச்சா சக்தி, கிரியாசக்தி சகிதம் சயணுரோகித்து அடியார்களுக்கு அழகிய பூஞ்சோலையிலேயே வீதிவலம் வந்து அருள்பாலிப்பார். இரவு எம்பெருமான் விநாயகர், வேணுகோபாலர் சகிதம் பூந்தண்டிகையிலே வீதிவலம் வந்து அருள் கொடுப்பார். இக்காட்சி அடியார்களுக்கு கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். 13-ம் நாளான சப்பறத் திருவிழாவிற்காக இரவு எம்பெருமான் விநாயகர், வேணுகோபாலர் சகிதம் அண்ணந்து பார்க்க முடியாதளவு உச்சியைக் கொண்டுள்ள கட்டுச் சப்பறத்திலே காட்சி தருவார்.

14-ம் நாள் ரதோற்சவத்திற்காக சண்முகப்பெருமான், விநாயகப்பெருமான், முருகப் பெருமான் சகிதம் தேரேறி வீதிவலம் வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார். இறுதிநாளான 15-ம் நாள் தீர்த்தோற்சவத்திற்காக எம் பெருமான் விநாயகர் சகிதம் ஊறணி சமுத்திரத்திற்கு எழுந்தருவார்.

இக்கல்யாண வேலவனிற்கு மகோற்சவ பதினைந்து நாட்களும் 9-ம் திருவிழா உபயகாரரான பொலிகண்டி கரையோர மக்களால் ஆலயத்தின் மேற்குவீதியிலுள்ளஅன்னதான மடத்திலே அன்னதானமும் வழங்கப்பட்டு வருகிறது. இப் பதினைந்து நாட்களும் பொலிகண்டி மாநகரமே விழாக் கோலம் பூண்டிருக்கும்.

இவ்வாலயத்தின் விசேஷ உற்சவங்களாக ஆனி மாதத்தில் வரும் அவிட்ட நட்சத்திரத்தில் பகல் 1008 சங்காபிஷேகமும், இரவு திருக்கல்யாண உற்சவமும் நடைபெறும். அத்துடன் மானம்பூத் திருவிழாவன்று எம்பெருமான் வன்னி வாழை வெட்டுவதற்காக பொலிகண்டி மருதாம்புலம் பதியில் வீற்றிருக்கும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்திற்கு எழுந்தருளுவார் ஐப்பசி மாத பூர்வபக்க பிரதமை தொடக்கம் சஷ்டி ஈறுக ஏழு நாட்கள் கொடியேற்றி கந்தர் சஷ்டித் திருவிழா நடைபெறும். இவ் உற்சவத்திலே 4-ம் நாள் தாரகன் போரும், 5-ம் நாள் சிங்கன்போரும், 6-ம் நாள் சூரன்போரும் மிகவும் விசேஷமாகக் கொண்டாடப்படும். 7-ம் நாள் எம்பெரு

(4ம் பக்கம் பார்க்க)

மலராக்கம்:

**சி. சுயம்பமூர்த்தி**

பொலிகண்டி.

உதவி:

**க. விவேகானந்தம்,**

செயலாளர்,

**சல்லிப்பிள்ளையார் கோவில்,**

பொலிகண்டி.


**பொலிகைக்கந்தனின்**

**அருள்வேண்டி நிற்கும்**

**ஜெகா மோட்டோர்ஸ்**

மின்சார உதிரிப்பாகங்கள், மோட்டோர் வகைகள் பெயின்ற் வகைகள் யாவும் விற்பனைசெய்யும் ஸ்தாபனம்.

பிரதான வீதி, நெல்லியடி.

**ஆனைமுகன் புடவை மாளிகை**

சகல ரக புடவை வகைகளுக்கும் சிறந்த ஸ்தாபனம்

தலைமையகம் :-

குட்லக் எம்போறியம்

பிரதான வீதி, நெல்லியடி,

பருத்தித்துறை.

**கண்ணன் ஸ்ரோர்ஸ்**

15 வருடங்களாக பொலிகை வாழ் மக்களுக்கு சேவை செய்யும் ஒரே ஒரு ஸ்தாபனம்

(பவாகடை)

உரிமையாளர்: க. விவேகானந்தம்

பொன்னுதோட்டம், பொலிகண்டி.

**லட்சுமி நகை மாளிகை**

ஓடர் நகைகள் குறித்த காலத்தில் உத்தரவாதத்துடனும் வேலைப்பாடும் கொண்ட பவுண் தங்க வைர நகை வியாபாரம்;

உரிமையாளர்: K. R, சோதிலிங்கம்

பிரதான வீதி, பருத்தித்துறை.

**ஹப்பி ரெக்ஸ்**

நாளுக்குநாள் மாறும் வண்ண வண்ணப்புடவைகளை எண்ணம்போல தெரிவு செய்ய ஏற்றதோர் புடவைப் பூஞ்சோலை

பிரதான வீதி, நெல்லியடி.



அ. கணேசு

நா. சுவேந்திரன்

மகாலட்சுமி

கி. சிவலிங்கம்

த. செல்வச்சோதி

ஆ. கிருஷ்ணமூர்த்தி

க. சிவா (கிளி)



**கந்தவேளின் அருள்பெற**

**வேண்டுபவர்**

**ஆதவன்ஸ்**

மின்சார, சைக்கிள் உதிரிப்பாகங்கள் விற்பனையாளர்

ம. ம. வி. வீதி, ... நெல்லியடி.

**ஜமுனா டிரேடர்ஸ்**

பலசரக்கு விற்பனையாளர்

பிரதான வீதி, நெல்லியடி.

**சிவா நகை மாளிகை**

ஓடர் நகைகள் குறித்த காலத்தில் உத்தரவாதத்துடனும் 22 கரட் தங்கத்தில் செய்து கொடுக்கப்படும்.

உரிமையாளர்: நா. ஜெயராஜா

பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

**சுசீலா ஆபரணமாளிகை**

முதல்தரமான தங்கப்பவுண், வைர நகைகளுக்கு சிறந்த இடம்

உரிமையாளர்: நற்குணம்

பிரதான வீதி, பருத்தித்துறை.

**கௌரி பூட்வெயர்**

ஃ பாதணிகள் ஃ சைக்கிள் உதிரிப் பாகங்கள் விற்பனையாளர்

உரிமையாளர்: ப. அன்பழகன்

ம. ம. வி. வீதி, நெல்லியடி.

## ஈராக் குண்டுவெடிப்பில்

# பிரெஞ்ச் அதிபரின் மனைவி மயிரிழையில் உயிர் தப்பினர்

(பக்தாத்)

ஈராக்கில் நடந்த குண்டு வெடிப்பொன்றிலிருந்து பிரான்ஸ் நாட்டு ஜனதிபதியின் மனைவி திருமதி மித்தரோன் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளார்.

ஈராக்கின் வடபகுதியிலுள்ள குர்திஷ் இன அகதிகளை பார்வையிட மூன்று நாட்கள் பயணத்தை இவர் மேற்கொண்டிருந்தார்.

இப்பகுதிக்கு அவர் வந்தபோது கார் ஒன்றிலிருந்த குண்டு வெடித்தது திருமதி மித்தரோன் காரினுள் இருந்ததால் அவர் தப்பிக்கொண்டார்.

ஆனல் நான்கு பேர் அந்த பேர் படுகாயமும் அடைந்த இடத்தில் பலியாகியும் 20 னர். (கே)

## சமுகமளிக்க வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]

ஆங்கில இலக்கியத்தை கற்பிப்பவர்களும், கற்பிக்க விரும்புபவர்களும் இம்மாதம் 9ம் திகதி மாலை 2-30 மணிக்கு யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெறும் இலக்கிய வகுப்புக்கு சமுகமளிக்கும்படி வேண்டப்படுகின்றனர். [சு]

### வேண்டுவோர்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மான் தீர்த்தோற்சவத்திற்காக ஆலய நறுநீர்க் கேணிக்கு எழுந்தருளுவார். கார்த்திகை மாதத்தில வரும் திருக்கார்த்திகை அன்று எம்பெருமான் சுட்கபானே (சொக்கப்பானே) தீப உற்சவத்திற்காக எழுந்தருளுவார். இதற்கு அடுத்தபடியாக திருவெம்பாவை 10 நாளும் அதிகாலை 4 மணிக்கு விசேட பூசைகளும் இறுதி நாளான திருவாதிரை அன்று சூரிய உதயத்தின்முன் எம்பெருமான் தீர்த்தோற்சவத்திற்காக ஆலய நறுநீர்க் கேணிக்கு எழுந்தருளுவார். தீர்த்தம் முடிந்ததும் திருவூஞ்சல்பா இடம்பெறும். தைப்பூசத் தினத்தன்று விசேட அபிடேக ஆராதனைகளும், திருவிழாவும் நடைபெறும். மாசி மக தீர்த்தோற்சவத்திற்காக பொலிகண்டி ஆலடிக் கடற்கரைக்கு எம்பெருமான் எழுந்தருவார். பங்குனி உத்தரத்திற்கு கந்தபுராணப்படிப்பு ஆரம்பமாகி வைகாசி விசாகத்தன்று நிறைவுபெறும். ஒவ்வொரு மாதமும் வரும் கார்த்திகைத் தினத்தன்று எம்பெருமானுக்கு கார்த்திகைத் திருவிழாவும் இடம்பெறும். இவ்வாறான விசேட உற்சவங்களும் எம்பெருமானுக்கு நடைபெறும்.

இவ்வாலயத்தின் தற்போதைய அர்ச்சகராக சிவசிறீ ச. வைத்தியநாதக் குருக்கள் கடந்த 20 வருடங்களாக அர்ச்சகராகக் கடமையாற்றிவருகிறார்.

மேற்படி ஆலயத்தில் உள்ள நறுநீர்க்கேணியானது தீராத நோய்களை தீர்க்கும் ஒரு அருமருந்தான தீர்த்தமாகும். அடுத்து அடியார்கள் இந்த தீர்த்தத்திலே அள்ளி தலவிருட்சமான வன்னி மரத்திற்கு பொங்கலிட்டு வழிபடுவார்கள்.

கந்தவனநாதர் அருள் பெற்று வையத்துள் நல்லவண்ணம் வாழ அவன்தாள் பணிவோமாக.

## முஸலிம்களை திருப்தி செய்யாத தீர்வை ஏற்கமாட்டோம் - அஷ்ரப்

(கொழும்பு)

வடகிழக்கு வாழ் முஸ்லிம்களை திருப்தி செய்யாத தீர்வு எதனையும் ஏற்கமாட்டோம் என்று முஸ்லிம் காங்கிரஸ்கட்சித் தலைவர் ஜனப் அஷ்ரப் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி பேராளர் மாநாட்டில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற முஸ்லிம் காங்கிரஸ் கட்சி பேராளர் மாநாட்டில் அவர்தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னி மாவட்டங்களின் முஸ்லிம்களை திருப்திப்படுத்தாத எந்த ஒரு தீர்வுக்கும் முஸ்லிம்காங்கிரஸ்கட்சி தமிழ் கட்சிகளுடனான பேச்சுவார்த்தைகளின் போது உடன்பாட்டுக்கு வராது என்றார். (மா)

## பிந்தரன்வாலே 'புலிப்படை'

(புதுடில்லி)

பஞ்சாப்பில் 'காலிஸ்தான்' தனிநாடு கோரிப் போரிடும் சீக்கிய தீவிரவாத அமைப்புகளில் 'பிந்தரன்வாலே புலிப்படை' என்ற அமைப்பு மிகப் பலம் வாய்ந்ததாக கருதப்படுகிறதாம்.

இந்த 'பிந்தரன்வாலே புலிப்படை' பல தாக்குதல்களை பஞ்சாப் பகுதியில் நடாத்தியுள்ளதாகவும் இராணுவ தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## விண்ணப்ப திகதி

(யாழ்ப்பாணம்)

1992ம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர சாதாரண பத்திர பரீட்சைக்குரிய விண்ணப்பப் படிவங்கள் யாழ். மாவட்டத்துக்கு இதுவரை வந்து சேராதபடியால், விண்ணப்ப திகதியை நீடிக்குமாறு யாழ். கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் பரீட்சை ஆணையாளரைக் கேட்டுள்ளார். (சு)

## விஞத்தாள்கள் வந்து சேரவில்லை

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 11ம் திகதிநடைபெறவுள்ள ஆரம்ப பயிலுனர் ஆசிரியர் பரீட்சைக்கான விஞத்தாள்கள் யாழ். மாவட்டத்துக்கு இதுவரை வந்து சேரவில்லையென யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இ சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

இது சம்பந்தமாக பரீட்சை ஆணையாளருக்கு தகவல் அனுப்பியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (சு)

## பெறுபேறுகள் அனுப்பிவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித்திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவின் 1990, 1991 வருடத்துக்கான மாணவர்களின் இறுதிப் பரீட்சைப் பெறுபேறுகள் சம்பந்தப்பட்ட பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பெறுபேறுகளை மீளாய்வு செய்யவிரும்புவோர் அதிபர்களுக்கூடாக இம்மாதம் 10ம் திகதிக்கு முன் முறைசாராக் கல்வி பிரிவினருக்கு விண்ணப்பிக்கலாம்.

1989ம் ஆண்டு வெளியேறிய மாணவர்களுக்குரிய சான்றிதழ்களும் சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், யாழ். கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப்பிரிவினர் மேலும் தெரிவித்தனர். (சு)

## உலர் உணவு

[யாழ்ப்பாணம்]

இராணுவ நடவடிக்கைகளின் அண்மையில் வலிகாமம் டக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு மேலும் இருவார உலர் உணவு வழங்கப்படுமென்று யாழ் அரசஅதிபர் திரு கா. மாணிக்கவாசகர் நேற்றுத் தெரிவித்தார். [வி]

## கருத்தரங்கு

(பண்டத்தரிப்பு)

போஷாக்கு உணவு பற்றிய கண்காட்சியும் கருத்தரங்கும சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியில் இம்மாதம் 10-ம் 11-ம் திகதிகளில் நடைபெறவுள்ளது. மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் நடாத்தப்படவுள்ளது.

### விமானப்படை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஷல் லோல்டர் பெர்னண்டோவின் மகன் என்று இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இவ்விமானத்தில் ஆறு அதிகாரிகளும், 13 விமானப்படையினரும் இருந்ததாகவும் இவர்கள் அனைவரும் பலியானதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ரி)

### சகடைபற்றி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பலாலிக்கு வந்துள்ளது.

பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க தலைமையில் வந்திருக்கும் இக்குழுவில், கூட்டுப் படைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா, விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் ரெறன்ஸ் குணவர்த்தன மற்றும் உயர் இராணுவ அதிகாரிகளும் பலாலி வந்துள்ளனர்.

விமானம் நொருங்கிய இடத்துக்குப் போகவோ அல்லது விமானச் சிதைவுகளை எடுக்கக்கூடிய நிலையில் இராணுவம் இல்லாதிருந்தபோதிலும், பலாலி விமான நிலயத்தில் இச்சம்பவம் பற்றிக் கண்டறிந்துகொள்ளவே இக்குழுவினர் வந்துள்ளனர்.

## குண்டுவீச்சு

[யாழ்ப்பாணம்]

கட்டைக்காடு, வெற்றிலைக் கேணிபுல்லாவெளி ஊரியான் பகுதிகளை நோக்கி குண்டு வீச்சு விமானங்கள் நேற்றும் கடும் தாக்குதல்களை மேற்கொண்டபடியிருந்தன.

இராணுவ முகாம்களில் இருந்து படையினர் கடுமையான ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர் குடத்தனைப் பகுதியை நோக்கியும் நேற்று முன்தினமிரவு பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டது. [56]

## தமிழினியனுக்கு அஞ்சலி!

(பண்டத்தரிப்பு)

புல்லாவெளியில் சகடை விமானத்தை சுட்டுவிழுத்திய போது வீரச்சாவை தழுவிக் கொண்ட வீரவேங்கை தமிழினியனின் [எதிர்பன்னசிங்கம் ஆனந்தவேல் கழிபுரம் வடக்கு] புகழுடம்பு நேற்று திங்கட்கிழமை நண்பகல் சுழிபுரம் வடக்கு ஆறுமுகவித்தியாலயத்தில் வைக்கப்பட்டபோது பெருந்தொகையான மக்கள் திரண்டு வந்து தங்கள் இறுதி அஞ்சலியை செலுத்தினர்கள். [72]

### விசாரணை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குறித்தும் இது எப்படி நடந்தது என்பதை அறியவும் இந்த விசாரணை மேற்கொள்ளப்படும் என்றும் விமானப் படை வட்டாரங்கள் தெரிவித்தன. (ரி)

### புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது கிடைத்திருக்கும் ஆதாரங்களை அடிப்படையாக கொண்டு புலிகள் வெற்றிகரமாக விமானத்தைச் சுட்டு வீழ்த்தியிருப்பதை நிராகரிக்க முடியாதுள்ளதாக அவ்அதிகாரிகள் தெரிவித்தனர். (ரி)

### பலவேகய - 2

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படைப்பிரிவுகள், 1-வது, 3-வது, 6-வது சஜபாகு படைப்பிரிவு, விசேட அதிரடி பிரிவு போன்றவற்றிலிருந்து பெருமளவு படையினர் ஈடுபடுத்தபபட்டுள்ளனர்.

தொடர்ந்து நடைபெறும் சண்டையில் படையினர் தரப்பில் பலர் உயிரிழந்தும், காயமடைந்தும் உள்ளதுடன் சீன டாங்கிகள் உட்படப் பல இராணுவ வாகனங்களும் புலிகளால் அழிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த ராணுவ நடவடிக்கையில் புலிகளின் கடல் தாக்குதல்களைமுறியடிக்க கொமாண்டர் மோகன் ஜெயமகா, விமானப்படைக்கு பொறுப்பாக வடபிராந்திய விமானப் படைத்தளபதி விங்கொமாண்டர் சுனில் கொப்ரா ஆகியோரும் இச்சண்டையில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் யாழ் இராணுவ நடவடிக்கைகளையும் மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ, கட்டுப்படுத்தி இராணுவத்தினரை நெறிப்படுத்திவருகிறார்.

லெப். ஜெனரல் சிசில்வைத்தியரத்ன, ஏயர் மார்ஷல் ரெறன்ஸ் குணவர்த்தன வைஸ் அட்மிரல் கிளான்ஸி பெர்னண்டோ ஆகிய முப்படைத்தளபதிகளும் களத்தில் நிற்பது குறிப்பிடத்தக்கது. (ரி)

பலாலியில் திரு. சிறில் ரணதுங்க விமானப்படை அதிகாரிகளுடன் உரையாடினர்.

இதனைத் தொடர்ந்து சிறில் ரணதுங்க, ஜெனரல் ஹமில்டன் வனசிங்க, மேஜர் ஜனரல் டென்சில் கொப்பேகடுவ ஆகியோர் வெற்றிலைக்கேணிக்கும் சென்றனர்கள், அங்கு பிரிகேடியர் விஜயவிமலரத்னவை யும் சந்தித்து நிலைமைகளைப் பற்றி உரையாடினர். (கே)

## நிவாரணப்படி நிறுத்தம்

(வேலணை)

தீவுப்பகுதியில் உள்ள பாடசாலைகளில் கல்வியைப் போதித்து வந்த ஆசிரியர்களுக்கு கஷ்டப்பிரதேசத்தில் கடமையாற்றிவருகின்றவர்களுக்கென வழங்கப்பட்டு வந்த நிவாரணப்படி நிறுத்தப்பட்டுள்ளது

தற்போது இவர்கள் யாழ். நகரில் வந்து கல்வியை போதித்து வருவதினுல் அவர்களுக்கு கவழங்ப்பட்டு வந்த கஷ்டப்பிரதேச கடமைபபடி வழங்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (75)

## தபாலங்களில் உதவிப்பணம்

[உடுப்பிட்டி]

பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட மாதாந்த உதவிப்பணம்பெறுபவர்களது உதவிப்பணம் இம்மாதம் முதல் அவ்வப் பகுதி உபதபாலகங்கள், தபாலகங்கள் மூலம் வழங்கப்படும்.

இதற்கான ஏற்பாடுகளை பருத்தித்துறை புதிய பிரதேச செயலர் திரு எஸ். முருகேசம்பிள்ளை மேற்கொண்டுள்ளார். [150]

### 549 தபால்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். போதனா வைத்தியசாலைக்கும், யாழ் மாநகர சபைக்கும் தடுப்பூசிகளும் வந்துள்ளன.

விரைவில் வரவிருக்கும் மற்றுமொரு கப்பலில் மா, அரிசி, மண்ணெண்ணை போன்ற பொருள்களும் வர இருப்பதாக அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார். [வி]

### விமானத்தின்

[1-ம்பக்கத் தொடர்ச்சி]

2000 அடிவரையில் தாழப் பறந்தே படம் பிடிக்கவேண்டும்.

இந்த உயரத்தில் எளிதில் சுட்டு வீழ்த்துவதற்கு ஏற்ற சாதனங்கள் விடுதலைப்புலிகளிடம் இருப்பதால் அது ஆபத்தானது என கருதப்பட்டதால் பின்னர் அந்த முயற்சி கைவிடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

### அதி உயரத்தில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நேற்று முன்தினம்விடுதலைப் புலிகளால் வை-8 அவ்ரோ விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டதையடுத்தே தாக்குதலுக்கு மேலும் இலக்காகலாம் எனக் கருதியே விமானங்கள் உயரத்திலிருந்தே குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டிருந்தன. அத்துடன் யாழ் குடாப் பகுதியிலும் உயரத்திலேயே விமானங்கள் சென்றதையும் காணக்கூடியதாக இருந்தது. [56]

### 9000 மாணவர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இம்முறையும் அதிகமானோர் கலைத்துறைக்குத் தெரிவாகியுள்ளனராம். 2,720 பேர் கலைத்துறைப் பட்டப்படிப்பை மேற்கொள்ள விருக்கின்றனர். பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகியுள்ள இவர்களுக்கு ஆகஸ்ட் மாதம் தொடக்கம் அக்டோபர் மாதம் வரை ஆங்கிலக் கல்வி புகட்டப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்முறை 180 முதல் 292 புள்ளிகளைப் பெற்றவர்களுக்குப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி வழங்கப்படுவதாகவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (மா-சி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம்இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு யூலை மாதம் 07ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a as a News paper at the General post office Sri Lanka under Licence Number B/10336/8